International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 03 Issue: 03 July to September 2021 www.irjtsjournal.org

# குருதிக்களம் கோவில் வரலாறும் வழிபாடும்

முனைவர் க. முத்துஇலக்குமி
*இணைப்பேராசிரியர்*
*தமிழ்த்துறை மற்றும் ஆய்வு மையம்*
*கள்ளிக்கோட்டைப் பல்கலைக்கழகம்*
*அரசுக்கல்லூரி,சித்தூர் ,*
*கேரளா,இந்தியா -678104*



***Abstract:***

*The event named Kuruthikalam is a significant one among the praying rituals of the Malaiyaraiyan tribals. This event also stands a historical record explicating the ancientness of the Malaiyaraiyan tribal people who live in the Thodupuzha taluk of the Idukki district. The Kuruthikalam village is situated at a distance of 20 km, on the way from the Thodupuzha thaluk leading to the Seruthoni of Kattappanai. Every year on 18th day of the month of Thai ( Maharamaatham ), the kuruthi poojai transpires to the Bhadrakaali amman who is established here. This place is known by the name Kuruthikalam as it means the field ( kalam ) where blood ( kuruthi ) is involved. Ensuing the Maharavilakku pooja of Sabarimala, the flag is lowered and the festival begins with the hoisting of flag at the Arakkulam ( Iyappan ) Dharmasaastha temple. The festival takes place for 7 continuous days and ends at the eighth day with the event occuring at the Puuchapaara Kuruthikalam temple. The people of the Malaiyaraiyan race who live outside also take part in this event without fail. They also fulfill the vow made to the Amman in accordance with this custom of worship.*

**கலைச்சொற்கள்**

*மலையரையன் --- பத்ரகாளியம்மன் – வனபத்ரகாளி -- குருதிக்களம் – அரக்குளம் – சபரிமலை - கொடி -- மணி – பலி – களநிகழ்வு.*

**முன்னுரை:**

மக்கள் கொண்டுள்ள இறை நம்பிக்கையின் வெளிப்பாடாக அமைவன வழிபாட்டுச் சடங்குகள்.கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற பழமொழிக்கு ஏற்ப மக்கள் வாழிடங்களில் அவரவர் விரும்பும் தெய்வங்களை நிலைநாட்டி வழிபட்டு வருகின்றனர். ஊர்க்கோயிலின் சிறப்பு அங்கு வாழும் மக்களின் ஒற்றுமையின் வெளிப்பாடு எனலாம்.ஒரு இனமக்கள் ஒன்று கூடி வழிபடும் தெய்வமாக பத்ரகாளியம்மனும் ,ஒருமித்து நட்த்தும் விழாவாக குருதிக்களம் களநிகழ்வு அமைந்துள்ளது.

இடுக்கி மாவட்டத்தில் வாழும் மலையரையன் பழங்குடி மக்களின் உரிமைக் கோவிலாக விளங்குவது குருதிக்களம் பத்ரகாளியம்மன் கோவில். கோவில் நிலைபெற்றிருக்கும் இடத்திற்கு பெயரும் குருதிக்களம் என்றே அமைந்துள்ளது. தொடுபுழா நகரிலிருந்து இருபது கிலோமிட்டர் தொலைவில் செருதோணி செல்லும் பாதையில் பூச்சப்பறா மேட்டில் அமைந்துள்ளது இவ்விடம். இக்கோவிலின் தோற்றம் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டது என்கின்றனர் இவ்வூர் மக்கள். வனப்பகுதியாக இருந்த இவ்விடத்தில் தம் முன்னோர் எதிரிகளின் படைக்கு அஞ்சி இங்கு வந்து தங்கியதாகக் கூறுகின்றனர் . அதாவது மதுரையிலிருந்து ஒரு கூட்டம் படையினரால் துரத்தியடிக்கப்பட்ட மக்கள் வனமாக இருந்த இப்பகுதியில் தஞ்சமடைந்தனர்.எதிரிகளை எதிர்த்துப் போரிட்டு குருதி நிறைந்த இடமாகையால் குருதிக்களம் என்று அறியப்பட்டிருக்கவேண்டும். பகைவரிடம் தப்பி உயிர்வாழ்ந்த இம்மக்கள் வைசூரி போன்ற கொடிய நோய்களால் தாக்கப்பட்டு மிகவும் துன்பப் பட்டதோடு பெரும்பகுதி மக்கள் இறந்தும் பட்டனர். வறுமை தலைவிரித்தாடியது. இத்துன்பத்திலிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ள பத்ரகாளியை பிரதிஷ்ட்டை செய்து வழிபட்டுவந்தனர் என்று கூறுகின்றனர். பத்ரகாளியின் துணையால் தான் இவ்விடத்தில் பகைவரை வென்று நிலைபெறமுடிந்தது என்பதால் காளிக்கு நன்றி செலுத்தும் வகையில் ஆண்டுதோறும் குருதிப்பலி கொடுத்து வழிபட்டு வருகின்றனர். உயிர்ப்பலி அரசாங்ககத்தினரால் தடை செய்யப்பட்டுள்ளதால் குருதியன்று பூசனிக்காய் பலியிடப்படுகின்றது.பத்ரகாளி அம்மனுக்கு ஆண்டுதோறும் தைமாதம் நடைபெறும் குருதிக்களம் நிகழ்வினைப் பதிவு செய்வதாக விளக்குவதாக இவ்வாய்வுரை அமைகின்றது.

**கோவில் பிரதிஷ்ட்டைதெய்வங்கள்**

கிழக்குமுகமாக அமைந்துள்ள இக்கோவிலின் வாயிலுக்கு நேராக மூல தெய்வமான பத்ரகாளியும் இடப்புறமாக கணபதியும் வலப்புறமாக வனபத்ரகாளியும் கோவில் கொண்டு அருள் பாலித்து வருகின்றனர் . எட்டு வருடங்களுக்கு முன்பு கோவில் புனரமைக்கப்பட்டு தினப்பூசை நடைபெறுகின்றது. நான்குபுறமும் கற்குவியலால் மறைக்கப்பட்டு தகரம் வேய்ந்ததாகக் காட்சியளித்த பழைய கோவிலின் உள்ளே அம்மனின் கண்ணாடி பிம்பம் (கண்ணாடிச்சட்டம் போட்ட படம் ) மட்டுமே தெய்வமாகக் காணப்பட்டதாகக் கூறுகின்றனர்.கோவிலைப் புனரமைக்க செய்யப்பட்ட ஏற்பாடுகள் தடைபட்டு வந்ததால் போர்க்களிபகவதிக்கு பிரசன்னம் (குறி) வைத்துப் பார்த்த போது இங்கு வனபத்ரகாளி நிலைகொண்டிருப்பதால் வனபத்ரகாளிக்கும் கோவில் அமைத்தால் மட்டுமே புனரமைப்பு செய்யமுடியும் என்று சோதிடர் சொன்னதால் இங்கு பத்ரகாளி ,கணபதியுடன் வனபத்திரகாளிக்கும் கோவில் அமைத்ததாகக் கூறுகின்றனர். மூன்று தெய்வங்களும் ஒத்த சக்தியுடன் விளங்கியதால் மூன்று தெய்வங்களுக்கும் ஒரே போன்று கோவில் அமைத்துள்ளனர். கோவிலைப் புனரமைக்க திருவிதாங்கூர் தேவசம் போர்டின் அனுமதியுடன் சிறிதளவு நிதியுதவியும் பெற்ற ஊர்மக்கள் ஒன்றிணைந்து பெரும் தொகையை நிதியாகத் திரட்டி தற்போதுள்ள கோவில் அமைப்பை உருவாக்கியுள்ளனர். 2012 ஆம் ஆண்டு கணபதி, பத்ரகாளி , வனபத்ரகாளி ஆகிய மூன்று தெய்வங்களும் பிரதிஷ்ட்டை செய்யப்பட்டனர். 2017 இல் குடமுழுக்கு விழா நடந்ததாகவும் அறியமுடிகின்றது.( கிருஷ்ணன் வயது 50 , மலையரையன் இனம், குருதிக்களம் ) கோவிலின் தலவிருட்சமாக அரச மரமும் ஆலமரமும் இணைந்து விளங்குகின்றன. திறந்தவெளி

வனத்தில் குடிகொண்டிருந்த தெய்வங்கள் இப்போது சுற்றுச்சுவர்களுக்குள் வீற்றிருந்து அருள் வழங்குகின்றனர். புறச் சுவரையொட்டி நாக பிரதிஷ்ட்டையும் அமைந்துள்ளது.

**சபரிமலை மற்றும் அரக்குளம் கோவில்களின்தொடர்ச்சி**

உலகறிந்த ஐயப்பனின் வழிபாட்டு இடமான சபரிமலை மலையரையன் பழங்குடி மக்களின் வழிபாட்டு இடம் என்றும் அங்கு நிலைகொண்டிருந்த கடவுள் சாஸ்தா என்பதையும் வாய்மொழிச் செய்தியாக அறியமுடிகின்றது. ஐயப்பன் பாண்டிய மன்னனின் இளையமகன் என்றும் இடுக்கிமாவட்டம் மறையூர் பகுதிகளில் தமிழகத்திலிருந்து தங்களைத் தொடர்ந்து வந்த பகைவர்களை ஐயப்பன் வெற்றிகொண்டதனால் அவர் கொண்டாடப்பட்டார் என்றும் சிலர் கூறுகின்றனர். எதிரிகளிடமிருந்து தம்மக்களைக் காத்ததால் ஐயப்பனை தொடர்ந்து வழிபட்டு வருகின்றோம் என்கின்றனர். சபரிமலையில் சாஸ்தா வழிபாட்டு தலத்தில் ஐயப்பன் ஐக்கியமாகிவிட்டதாகவும் நம்புகின்றனர். ஐயப்பன் சாஸ்தா கோவிலுக்குள் கொல்லப்பட்டிருக்கவேண்டும் என்ற மாற்றுக்கருத்தும் முன் வைக்கப்படுகின்றது . அன்று முதல் ஐயப்பன் கோவிலாக அழைகப்படுவதாகவும் அறியமுடிகின்றது.(. சசிதரன் எம் .ஐ ,வயது 65 ,மலையரையன் இனம்,பூச்சப்பாற). தொன்மைச் சாத்தன் வழிபாடு மற்றும் தமிழக நாட்டார் தெய்வமான சாஸ்தாவே ஐயப்பன் என்ற கருத்துக்களோடு ஒப்பிட்டு ஆராயவேண்டிய செய்தி இது. சாஸ்தா தென்மாவட்டங்களில் பல குடும்பங்களின் குலதெய்வமாக இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. சபரிமலைக் கோவில் வழிபாடு மலையரையன் இனக்குழு மக்களுக்குரியதாகவே இருந்தது என்பதை சில எழுத்துப் பூர்வமான சான்றுகளும் சபரிமலை பற்றிய வரலாற்றுச் செய்திகளும் இன்றுவரைத் தொடரும் சில நடைமுறை வழக்கங்களும் உணர்த்துகின்றன. சபரிமலை ஐயப்பன் கோவில், அரக்குளம் தர்மசாஸ்தா கோவில், குருதிக்களம் கோவில் என மூன்று கோவில்களிலும் வழிபாடு தொடர் வழிபாடாக அமைகின்றது.

சபரிமலையில் மகரசோதி முடிந்து கொடி இறக்கியபின் அரக்குளம் தர்மசாஸ்தா கோவிலில் கொடி ஏற்றப்படுகின்றது. ஏற்றப்படும் கொடியும் மணியும் சபரிமலைக் கோவிலிலிருந்து கொண்டுவரப்படுகின்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அரக்குளம் கோவிலின் மற்றொரு சிறப்பு யாதெனில் சபரிமலையில் அமைந்துள்ள ஐயப்பன் உருவத்தை ஒத்து அதே அளவில் இங்கும் மூர்த்தி அமைந்திருப்பதுதான். இக்கோவிலின் தோற்றம் குறித்த வரலாறும் வியப்பூட்டுவதாகவே அமைந்துள்ளது. சபரிமலையில் பூசைசெய்து வந்த அந்தணர் ஒருவர் சிறு குன்றுகள் நிறைந்த இருந்த அரக்குளம் பகுதியில் தங்கி தினமும் சென்று பூசைசெய்து வந்ததாகவும் அவர் சென்று வருவதற்கு குகைவழி ஒன்று இருந்ததாகவும் கோவிலின் தென்கிழக்குப் பகுதியில் அவ்வழி இருந்ததிற்கான எச்சங்கள் காணப்படுவதாகவும் கோபாலகிருஷ்ண பணிக்கர் கூறுகின்றார். முதுமைகாரணமாக மகரவிளக்கு பூசையன்று மலைக்குச் செல்லமுடியாத அந்தணர் மனம் வருந்தித் துன்பப்பட்டார் என்றும் அவரது கனவில் தோன்றிய சாஸ்தா உனது இல்லத்தின் ஒரு பகுதியில் ஒளி (சரம் ) தோன்றிக் காட்சிதரும் அந்த இடத்திலேயே தன்னை வழிபாடுமாறு கூறியதாகவும் அடுத்த நாள்முதல் அந்தணர் தம் இல்லத்திலேயே சாஸ்தாவை வழிபடத்தொடங்கினார் என்றும் இதனை அறிந்த அரசர் அரக்குளத்தில் வழிபாட்டிற்கான கோவில் அமைக்குமாறு கூறினார். அதனால் பந்தளம் அரசரின் நேரடிப்பார்வையில் கல் கொண்டுவரப்பட்டு சபரிமலையின் அதே அளவில் எந்த சிறு வேறுபாடுமின்றி இங்கு சாஸ்தா பிரதிஷ்ட்டை செய்யப்பட்டதாகவும் கோவில் வரலாறு பற்றி

கூறுகின்றனர். (கோபாலகிருஷ்ண பணிக்கர் ,வயது 70 ,அரக்குளம் ) அன்று முதலே சபரி மலையிலிருந்து கொடியும் மணியும் கொண்டுவந்து வழிபாடுகள் செய்யப்படுவதாகவும் அவர் கூறினார். மூலதெய்வமாக தர்மசாஸ்தா விளங்க சிவனும் மாளிகைப்புரத்து அம்மனும் ஐயப்பனின் இருபுறமும் நிலைகொண்டுள்ளனர். கோவில் வளாகத்தில் கணபதி மற்றும் நாகர் சிலைகளும் இடம்பெற்றுள்ளன. தை பதினெட்டாம் நாள் குருதிக்களத்தில் பலி கொடுத்து திரும்பிய பின் இரண்டு பாலைமரக்கம்பும் குலைவாழையும் நட்டு தர்ப்பணம் அதாவது சமர்ப்பணம் செய்து ஐந்து வித அபிசேக ஆராதனையுடன் வழிபாடு நிறைவு செய்யப்படுகின்றது. குருதிக்களத்தில் களப்பூசை முடிந்த நள்ளிரவிலேயே இங்கும் கொண்டமுருகு இல்லத்தார் வழிபாடு முடித்துச் செல்கின்றனர். அடுத்த நாள் அதாவது மகரம் 19 ஆம் நாள் கொடி இறக்கப்பட்டு கலசசுத்தி எனப்படும் தாந்திரீக பூசை செய்யப்படுகிறது. கொடியும் மணியும் சபரிமலையில் ஏற்பிக்கப்படும் அடுத்த ஆண்டு கொடியையும் மணியையும் பெற்றுவந்து விழா நடத்துவர். ஏழு நாட்கள் காலை மாலை ,(புஷ்பாஞ்சலி) மலர் ஆராதனை , நேர்ச்சை வழிபாடு ,யானை ஊர்வலம் , வெடி, கலைநிகழ்ச்சிகள் , அன்னதானம் எனச் சிறப்பாகக் கொண்டாடப்படும் விழா முடிவடைகின்றது.

**கொடியும் மணியும்**

அரக்குளம் கோவிலுக்கு கொடியும் மணியும் வாங்கிவரும் உரிமையுடை குடும்பத்தினரான தெற்கும் சேரில் பணிக்கர் குடும்ப வாரிசான கோபாலகிருஷ்ண பணிக்கர் கோவிலுக்கு அருகிலேயே வாழ்கின்றார். எழுபது அகவையாளரான இவர் 1975 முதல் நாற்பத்தியைந்து ஆண்டுகளாக கொடியும் மணியும் பெற்றுவருகின்றார். கொடியும் மணியும் பெற்றுவருவதற்கான எழுத்து ஆதாரங்கள் (கடிதங்கள் ) இவரிடம் உள்ளன. தொடக்ககாலத்தில் கொடி ,மணி , சந்தனம் இவற்றோடு குருதிக்களத்தில் வெட்டுவதற்கு ஒரு ஆடும் 50 ரூபாய் பணமும் பெற்றுவந்ததாக அறியமுடிகின்றது. சில ஆண்டுகளில் ஆடு வாங்குவதற்கான பணம் கொடுக்கப்பட்டதும் உண்டு . 1960 இல் உயிர்வதை தடைசெய்யப்பட்ட பின்னர் கொடி ,மணி ,சந்தனம் ,பணம் இவற்றை மட்டுமே பெற்றுவருகின்றனர் .கொடி ஏற்றும் உரிமை குடையத்தூர் மணிமலைக் குடுப்பத்தாருக்கு உரியது. ஒவ்வொரு ஆண்டும் பிரதிஷ்ட்டை நிகழ்வு ஏப்ரல் 30 நாள் தொடங்கி மே 10 இல் நிறைவடைகின்றது .மே ஏழாம் நாள் புதிய தெய்வநிலைப்பாடு (பிரதிஷ்ட்டை) நடைபெறும் மூன்று தெய்வங்களுக்கும் ஒரே நேரத்தில் தெய்வநிலைப்பாடு செய்வது அபூர்வமான நிகழ்வாகும். சபரிமலை மகரசோதியின் தொடர்விழாகவே அரக்குளம், குருதிக்களம் கோவில்களின் வழிபாடு அமைவதை இச்செய்திகள் உணர்த்துகின்றன.

**சபரிமலையும் மலையரையன் இனமக்களும்**

வளம் பொருந்திய மலைகளில் ஒன்றாய சபரிமலை சாஸ்தா மலையரையன் இனமக்களின் குலதெய்வமாக விளங்கியமையை அறியமுடிகின்றது. தொடக்க காலத்தில் மண் ,கல் ,மரம் ,புல் இவற்றைப் பயன்படுத்தி அங்கு வாழ்ந்திருந்த மலையரையன் இனத்தவர் கோயிலை உருவாக்கினர். 'வெட்டிக்கெட்டுபுரை . போன்று அமைந்த அக்கோயிலின் பூசாரியும் துள்ளல்காரனும் வெளிச்சப்பாடுமாக இருந்தவர் எரும்பிர (எருமைப்பாறை ) என்னும் மலையரையன் கிராமத்தில் வாழ்ந்த மலையரையன்

சமூகத்தில் பட்ட தாளநாணி ஆவார். அவருக்குப்பின் இக்கோயில் தீப்பற்றி எரிந்து அழிந்துவிட்டதாம். வேண்டுமென்றே நெருப்பு வைத்திருக்க வேண்டும் என்ற கருத்தும் நிலவுகின்றது. திருவிதாங்கூர் மக்களின் சமூக வாழ்வு குறித்து ஆய்வு செய்த ரவ.சாமுவேல் மெட்டீர் 1883 இல் தாம் வெளியிட்ட **நேட்டிவ் லைப் இன் ட்ரவான்கூர்** என்னும் நூலில் மலையரையன் மக்கள் சமூகம் குறித்து விரிவாகப் பேசுகின்றார். 1 இந்நூலில் சபரிமலையில் புரோகிதனும் துள்ளல்காரன்மான தாளநாணி பற்றியும் குறிப்பிடுகின்றார். இச்செய்திகளால் தொடக்க காலத்தில் மலையரையன் இன மக்களின் தெய்வமாக சாஸ்தா விளங்கிய பின்னர் பந்தளம் அரசர் கட்டுப்பாட்டில் வந்திருக்கவேண்டும் என்பதையும் உணர்த்துகின்றன. மதுரையை ஆண்ட அரசபரம்பரையினரின் செம்பழனூர் பிரிவினரே பந்தளம் அரச பரம்பரையின் பூர்வீகர் என்று நம்பப்படுகின்றது. கொல்லவருடம் 377 இல் அவர்கள் பந்தளத்தில் நிலையாக வாழத்தொடங்கினர் என்றும் பந்தளம் ,காக்காடு ,கோணி ,அரக்குளம் ஆகிய நான்கு வட்டங்கள் (தாலூக்கா) அடங்கியது பந்தளம் நாடாக அறியப்பட்டது என்பதையும் அரக்குளம் கோவில் தோற்ற வரலாற்றில் குறிப்பிடப்படுகின்றது (அரக்குளம் ஸ்ரீ தர்மசாஸ்தா சேத்தரத்திலே புனம் பிரதிஷ்டா மஹோல்சவம்-2001,ப,11) .[2].

**குருதிக்களம்பூசை நிகழ்வுகள்**

கோவிலில் பதினைந்து வருடமாக தினப்பூசை நடைபெறுகின்றது. கார்த்திகை மாதம் செவ்வாய் வெள்ளி சிறப்பு பூசையும் நடைபெறுகின்றது. கோவில் நிர்வாகம் திருவிதாங்கூர் தேவசம்போர்டின் கீழ் வந்தது முதல் தேவசம் போர்டினரால் நியமிக்கப்பட்ட மேல்சாந்தி ஒருவர் பூசை செய்கின்றார்.( பானர்ஜி வயது 52 - மலையரையன் இனம், குருதிக்களம்) இவர் தவிர எழுத்தர் மற்றும் பொறுப்பாளர் ஒருவரும் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். கோவில் உண்டியல் , ஆராதனை ,அபிஷேகம் சார்ந்த வருமானம் முழுவதும் தேவசம் போர்டிற்கு உரியது. குருதி தினத்தன்று நடைபெறும் மலர் ஆராதனை , குருதி நேர்ச்சை ,வெடி , போன்ற அனைத்திற்குமான கட்டணமும் தேவசம் போர்டிற்குரியதே. இந்த வருவாயே தெய்வ ஆராதனைப் பொருட்களின் செலவிற்கும் ஊழியர்களின் ஊதியத்திற்குமான வருவாயாக தேவசம் போர்டிற்கு கிடைப்பது. குருதி பூசைக்கான அனைத்து செலவுகளையும் ஊர்மக்களே ஏற்கின்றனர். அத்தோடு குருதி நடத்தும் தந்திரி மற்றும் உதவியாளர்களுக்கும் ஊர்மக்கள் சார்பாக பணம் கொடுக்கப்படுகின்றது.

**குருதி – கள நிகழ்வு**

அரக்குளம் கோவில் நிர்வாக வழிப்படுத்துதலின் அடிப்படையிலேயே இங்கு பூசைகள் நடத்தப்படுகின்றன. தை மாதம் 5,6,7 தேதிகளில் தொடங்கும் நிகழ்வுகளில் 5 ஆம் தேதி தொடக்க பூசையாக அமைகின்றது . 6 ம் தேதி நாக பிரதிஷ்ட்டையும் பிரதிஷ்ட்டா கலசமும் நடைபெறும் .7 ஆம் தேதி வனபத்திரகாளிக்கு ஒரு கோலக்களத்தில் தாந்திரீக குருதி நடைபெறும். இந்த நாட்களில் நடைபெறும் பூசைகள் கோவில் புனரமைக்கப்பட்ட பின்னரே நடைபெறுகின்றன என்றும் தை 18 இல் நடைபெறும் குருதியே தொடக்க காலம் முதல் நடைபெறும் குருதி என்பதையும் கள ஆய்வில் அறிய முடிந்தது. தை 18 அன்று காலை வழிபாடு மற்றும் மதிய அன்னதானத்தைத் தொடர்ந்து மாலை நான்கு மணியோடு களம் அமைக்கும் வேலைகளில் ஈடுபடுகின்றனர். களம் சார்ந்த செயல்களில் ஆண்களே ஈடுபடுகின்றனர்.

கோவிலின் இடப்புறமாக புறமதிற்சுவரையொட்டி தரையைச் சுத்தம் செய்து ஏறக்குறைய பதினைந்தடி நீளமும் ஐந்தடி அகலமும் கொண்டதாக களம் அமைக்கின்றனர். சுத்தம் செய்த மண் தரையில் மணல்பரப்பி சமப்படுத்தியபின் வாழைமட்டைகளால் சதுரமாகக் களம் அமைக்கின்றனர். களத்தில் பச்சரிசிப் பொடி தூவப்படுகின்றது. இரண்டு பெரிய களங்களும் இக்களங்களையடுத்து இருபுறமும் இரு சிறிய களங்கள் என மொத்தம் ஆறு களங்கள் அமைக்கப்படுகின்றன. களம் முழுவதும் தென்னையின் குருத்தோலை நறுக்குகள் குத்தப்படும். களத்தின் பெரும் பிரிவாகிய இரு பிரிவுகள் ஒவ்வொன்றிலும் வளமான குலைவாழை மரத்தை நட்டு அதனோடு கிளையுடன் கூடிய பாலைமரத்தின் கொம்புகளைச் சேர்த்து கட்டுகின்றனர். வாழையின் தண்டுகளில் குருத்து நறுக்குகளைக் குத்துவதோடு ,இலைகள் ,பாலைமரக்கிளைகள் என அனைத்திலும் தென்னைக் குருத்தோலை நறுக்குகளைத் தொங்கவிட்டு அலங்கரிக்கின்றனர்.

களத்தின் முன்புறமாக ஐந்து பித்தளை உருளிகளில் நீர் நிரப்பி வைக்கின்றனர். தந்திரியின் இடமிருந்து வலமாக இரண்டாவது உருளி மிகப்பெரியதாகவும் ஒன்று மற்றும் மூன்றாவது உருளிகள் ஒத்த அளவிலும் காளப்படுகின்றது. நான்காவது உருளி மூன்றாவதைவிடச் சற்று சிறியதும் ஐந்தாவது நான்காவது உருளியைவிடச் சற்று சிறியதுமாக வைக்கப்படுகின்றது. எதிர்த்திசையில் அதாவது களத்திற்கு மறுபுறம் ஒத்த அளவுள்ள ஐந்து உருளிகளில் அரிசிப்பொடி மஞ்சள் ,குங்குமம் கலந்த கலவை நீர் நிறைத்து வைக்கப்படுவதோடு எட்டு குத்து விளக்குகளும் ஏற்றிவைக்கப்படுகின்றன. விளக்குகளின் இருபுறமும் இரு தலைவாழை இலைகள் வைக்கப்படுகின்றன. ஒன்றில் வேட்டி ,துண்டு ,நெற்பொரி போன்றவை வைக்கப்பட்டிருந்தன. . மற்றொரு இலையில் வேட்டி துண்டோடு தேங்காய் வைத்து அதன்மேல் நான்கு தர்ப்பைப் புற்களை மேல்நோக்கி இணைத்து கோபுரமாக அமைத்திருப்பர். வேட்டி துண்டு வைக்கப்பட்ட இலைகள் ,தேங்காய் வைக்கப்பட்ட இலைகள் என எட்டு எட்டு மொத்தம் பதினாறு இலைகள் வைக்கப்படுகின்றன. இவை பூசை நடத்தும் பூசாரிகளுக்குரியது. இரு முனைகளிலும் வைக்கப்படும் விளக்குகளை அடுத்து உருளியில் பூசைப்பொருட்கள் நிறைத்து வைக்கப்படுகின்றது. விளக்குகளில் இரு திரியிட்டு தீபம் ஏற்றப்படுகின்றது. விளக்கின் திரிகள் மேற்கு மற்றும் கிழக்கு திசை நோக்கி ஏற்றப்படுகின்றன.

களத்தில் ஏழு தீப்பந்தங்கள் நாட்டப்படும். பெரிய களத்தில் அதாவது வாழை மரங்கள் நடப்பட்ட களத்தில் மூன்று தீப்பந்தங்களும் மற்ற நான்கு தீப்பந்தங்கள் களத்தின் இருபுறமும் அமைக்கப்பட்ட சிறிய களங்களில் ஒவ்வொன்று நடப்படுகின்றது. களங்களில் தென்னங்குருத்தோலை நறுக்குகள் குத்தப்படுகின்றன. தென்னங்குருத்தோலை நறுக்குகள் குத்தப்பட்ட வாழைமரங்கள் முள்மரம்போன்று காட்சியளிக்கின்றது. களத்தின் முன்புறம் நீண்ட சற்று உயரமான நாற்காலி வைக்கப்பட்டு அதில் பூசைக்கான நீர், மலர்கள் , மணி சாம்பிராணித் தூபம் , சந்தனம் , குங்குமம் , தீபம், நீர்க்கெண்டி ,மணி , சங்கு போன்றவை வைக்கப்பட்டிருக்கும். சரியாக இரவு பதினொன்றுக்கு பூசை ஆரம்பமாகின்றது. பூசைக்கென அழைத்து வரப்படும் தந்திரியே பூசையை நடத்துவார். அவருக்குத் துணையாக இளம் வயது

உதவியாளர் நால்வர் அல்லது ஐவர் உடன் இருப்பர். தந்திரி ஏற்கனவே அணிந்த பூனூலுடன் தடினமாகத் திரிக்கப்பட்ட (துண்டைச் சுருட்டியது போன்று காட்சியளிக்கும் ) பூனூல் வளையத்தை அணிந்து கொள்கிறார்.

பூசை தொடங்கும் போது நற்கலியை அடுத்து தரையில் விரிக்கப்பட விரிப்பின் மீது நின்றவாறு குருதியை பஞ்ச வாத்தியங்கள் முழங்க ஆரம்பித்த தந்திரி மந்திரங்களை வாயிக்குள் முணுமுணுத்தவாறு நீர் மாற்றும் மலர்களை நீர் நிறைந்த உருளிகளில் மாற்றி மாற்றி போட்டுக்கொண்டிருந்தார். இடையிடையே தீப தூபமும் காட்டி மணி ஓசையோடு பூசை செய்தார். இப்பூசைக்கு செவ்வரளி மற்றும் சிவப்புத் தெட்சி மலர்கள் பயன்படுத்தப்படுகின்றன. சரியாக நாற்பத்தைந்து நிமிடங்கள் இவ்வாறு மந்திரம் கூறியவாறு பூசை தொடர்ந்தது. அதன்பின் உருளிகளில் மஞ்சள் குங்குமம் இட்டு குருதி கலக்கினார். பின்னர் தலைமீது கைகூப்பி வணங்கிய தந்திரி கலக்கிய நீரை முதலில் இருகைகளிலும் மூன்று முறை அள்ளி களத்தில் ஊற்றியபின் உருளி நீரை வேகமாகக் களத்தில் வாரி இறைத்து இறுதியில் உதவியாளரின் துணையோடு பாத்திரத்தோடு கவிழ்த்தார். நீர் கவிழ்கப்பட்ட உருளியை அவ்விடத்திலேயே குப்புறக் கவித்தபின் உதவியாளர் நீர் சொரிய கைகளைக் கழுவிக் கொள்கிறார். கவிழ்த்து வைக்கப்பட்ட உருளியின் மீதும் நிர்விட்டு தூய்மைப்படுத்தியபின் உருளிமீது நிர் விழும்படி தேங்காய் உடைத்து , உடைத்த தேங்காயை கவிழ்த்து வைக்கப்பட்டௌருளியின் மீது வைத்து மலர் மற்றும் நெற்பொரியையும் வைக்கின்றார் உதவியாளர் ஒருவர். வரிசையாக வைக்கப்பட்ட ஐந்து உருளிகளில் இரண்டாவது உருளியில் தொடங்கிய தந்திரி தொடர்ந்து மந்திரம் உச்சரித்தவாறே அடுத்தடுத்த உருளிகளில் உள்ள நீரையும் முதலில் செய்தது போன்றே களத்தில் வாரி இறைத்து ஊற்றினார். இரண்டாவதாக மூன்றாவது உருளிநீரையும் மூன்றாவதாக முதல் உருளி நீரையும் கவிழ்க்கிறார்.தொடர்ந்து நான்காவது , ஐந்தாவது என உருளி நீர் களத்தில் கொட்டப்பட்டது. மஞ்சள் குங்குமம் கலந்த செந்நிற நீர் ஊற்றப்பட்ட களம் குருதி நிறைந்த சிறுகுளமாகக் காட்சியளித்தது. தொடர்ந்து உதவியாளர்களில் இருவர் துணியால் சுற்றிய ஒருபிடி (சூரல்)மூங்கில் குச்சிகளை கையில் பிடித்தவண்ணம் நெருப்பேற்றினர் உடனிருக்கும் மற்ற இருவர் உயரமாக தூக்கிப்பிடித்த அந்நெருப்புக்குச்சிகளின் மேல் அரிசிப்பொடியைத் தூவ நெருப்பு உயர்ந்து தாழ்ந்தது. இவ்வாறு பல முறை செய்தனர். அவர்கள் தம் முகத்தில் நெருப்பு படாமல் இருக்க தலையில் வெள்ளை நிறத்துண்டினை போர்த்திக்கொண்டனர்.பின்னர் அந்த நெருப்புக்குச்சிகளை களத்தின் பல இடங்களிலும் போட்டனர். களம் நெருப்புப் பற்றி அணைந்தது.

குருதி பூசை நடந்துகொண்டிருக்கும் போதே உதவியாளர்கள் தீப்பந்தங்கள் கெடாவண்ணம் இடை இடையே நெய்யை ஊற்றிக்கொண்டிருந்தனர். பந்தத்தில் சுற்றிய துணி எரிந்த நிலையில் வேறு துணி சுற்றி பந்தம் கெடாமலும் பார்த்துக் கொண்டனர். பந்தம் ஏறக்குறைய ஐந்து அடி நீளமுள்ள மரக்கம்புகளில் ஒரு அடிக்கு துணி சுற்றப்பட்டிருந்தது. துணி கீழே இறங்காமல் இருக்க அரை அடி நீளமுள்ள வாழைத்தண்டினைக் அக்கம்பில் குத்தி தடை ஏற்படுத்தியுருந்தனர். தொடர்ந்து உதவியாளர்களில் ஒருவர் எதிர்த்திசையில் வைக்கப்பட்ட உருளிகளிலிருந்து அரிசிப்பொடி குங்குமம், மஞ்சள் கலக்கிய சிவந்த கலவையை களத்தில் நடப்பட்ட வாழைமரங்களில் எடுத்துப் பூசினார். செந்நிறக்கலவை பூசப்பட்ட

வாழைமரங்கள் குருதி சொரியும் புண் கொண்ட மனித உருவம் போன்று காணப்பட்டது.இச்செயல்கள் முடியும்வரை தந்திரி மந்திரங்கள் உச்சரித்து நீர் மற்றும் மலர்களைத்தூவி பூசித்தவாறு இருந்தார். இறுதியில் அனைத்து உருளிகளின் மீதும் கற்பூரம் ஏற்றிவைத்து வழிபடுகின்றனர். பூசை நிறைவடையும் நேரம் செண்டையின் ஒலி அவ்விடத்தையே அதிரச்செய்ய தந்திரி பூசணிக்காயை குறுக்கு வெட்டாக வெட்டி மஞ்சள் குங்குமம் தடவி குருதிப் பிண்டமாகக் களத்தில் வைத்தார்.சரியாக இரண்டு மணிநேரம் இப்பூசை நிகழ்வுகள் நடைபெறுகின்றன. பூசை முடிந்தவுடன் களத்திலிருந்து எடுத்த செந்நிற அரிசிமாக்கலவையுடன் நெற்பொரி மற்றும் பூக்கள் வாழை இலையில் பிரசாதமாக வழங்கப்படுகின்றது. பிரசாதம் பெற்றவுடன் அனைவரும் கோவிலை விட்டுச் சென்றுவிட பணிக்கப்படுகின்றனர். தொடர்ந்து காலை களம் அழிக்கப்படும் என்றனர் .

தொடக்க காலங்களில் குருதிக்காக நரபலி கொடுக்கப்பட்டதாக ஊர்மக்கள் கூறுகின்றனர். அரச கட்டளையாக நரபலி கொடுக்கப்பட்டு வந்ததாகவும் விக்டோரியா மகாராணி காலத்தில் பெற்றோருக்கு ஒரே பெண்ணாக இருந்த கன்னிப்பெண் பலியிடப்பட அவளது பெற்றோர் பட்ட துன்பத்தை அறிந்த ராணி நரபலிக்குத் தடை விதித்ததாகவும் முதியோர் சிலர் கூறுகின்றனர். நரபலிக்கு ஈடாக ஆடு பலி இடப்பட்டது. தொடர்ந்து கோழி வெட்டுவதும் வெட்டிய கோழியைப் பறக்கவிடுவதும் நிகழ்ந்ததை அறியமுடிகின்றது. உயிர்வதை தடைசெய்யும் வரை இவை பலியிடப்பட்டன. 1960 இல் உயிர்வதை தடைசெய்யப்பட்டது முதல் பூசணிக்காய் பலியிடப்படுகின்றது. இக்குருதி பூசை இங்கு நிறைந்திருக்கும் கெட்ட சக்திகளை விரட்டுவதற்காகவும் நல்ல சக்திகளை நிலைநிறுத்துவதற்காகவும் நடத்தபடுவதாகக் கூறுகின்றனர்.தலைவியின் பிணிநீங்க முருகனுக்கு வேலன் களம் அமைத்து வெறியாட்டு நடத்திய நிகழ்வினை நினைவூட்டுவதாக இந்நிகழ்வு அமைந்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் பூசை முடியும் தருவாயில் காற்று சக்தியாக வீசுவதும் மழைத்துளிகள் வீழ்வதும் இச்செய்தியை வலியுறுத்துவதாக அமைகின்றது. குருதிக் காலத்தை இம்மக்கள் விரத நாட்களாகக் கருதுகின்றனர். இந்த நாட்களில் அதாவது தை ஏழு முதல் தை பதினெட்டு வரை அசைவம் உண்பதோ , சுபகாரியங்கள் செய்வதோ கிடையாது. சூரசம்கார நாட்களில் தமிழர் கடைபிடிக்கும் விரதத் தன்மையை ஒத்ததாக இவ்வழக்கம் அமைந்துள்ளது. சிலர் இறுதி ஏழு அல்லது ஒன்பது நாட்களை மட்டுமே விரத நாட்களாகக் கொள்கின்றனர். குருதி முடிந்த அடுத்த நாள் அசைவம் உண்டு மகிழ்கின்றனர்.

**களபூசை நிகழ்த்துநர்**

கோவிலில் அன்றாடம் பூசைசெய்யும் பூசாரி இக்குருதி பூசையை செய்வதில்லை. இப்பூசை செய்வதற்கென்று தனியாக ஒரு தந்திரியின் குடும்பம் நியமிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து அவர்களது குடும்பத்திலுள்ளவர்களே குருதிபூசையைச் செய்கின்றனர். 2017 முதல் ஸ்ரீ பிரஜேஷ் நீலகண்டன் என்பவர் இப்பூசையைச் தொடர்ந்து செய்து வருகிறார். (கோபாலகிருஷ்ண பணிக்கர்( தேவசம் போர்டு) கடிதம் ) குருதி நடத்துவதற்கான பந்தளம் அரசரின் கட்டளையை ஏற்று கொண்டமுருகு இல்லத்தினர் தொடர்ந்து நடத்திவருகின்றனர். அரசர் காலத்தில் இவ்வில்லத்தார்க்கு இதற்காக ஒருகிழி பணம் வழங்கப்பட்டு

வந்ததாகவும் பண உதவி இல்லத காலங்களிலும் இவர்கள் தொடர்ந்து இப்பூசையை நாத்திவந்ததாகவும் கூறப்படுகின்றது. தற்போது தேவசம்போர்டின் சிறு உதவித்தொகை வழங்கப்படுவதையும் கள ஆய்வில் அறியமுடிந்தது. பண உதவி இல்லாத காலங்களிலும் கொண்டமுருகு இல்லத்தினர் குருதியைத் தொடர்ந்து நடத்துவதற்கு அவர்களுக்குக் கிடைத்த தெய்வ அருளே காரணமென்கின்றனர் ஊர்மக்கள். குருதி தொடங்கிய காலம் முதல் இன்றுவரை ஒருமுறை கூட தை 18 இல் குருதி நடத்துவதற்கு இறப்பு , பிறப்பு போன்ற தீட்டுகால இடையூறுகள் ஏற்பட்டதில்லை என்றும் கூறுகின்றனர்.

**முடிவுரை :**

கோவில் என்றாலே அக்கோவில் சார்ந்த திருவிழாக்கள் முக்கியத்துவம் வாய்ந்தன. இத்தகைய விழாக்கள் மக்களின் மகிழ்ச்சிக்கும் ஒருமைப்பாட்டிற்கும் வழிவகுக்கின்றன எனில் மிகையன்று. கோவில் சார்ந்த திருவிழாக்கள் அக்கோவிலின் தோற்றம் ,அங்கு நிலைபெற்றிருக்கும் தெய்வம் சார்ந்த நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படுகின்றன.இவ்விழாக்கள் அங்கு வாழும் மக்களின் வரலாறு , வாழ்வியல் சூழலின் அடிப்படையில் அமைவது போன்று குருதிக்களம் கள நிகழ்வும் தமிழகத்திலிருந்து துரத்தியடிக்கப்பட்ட ஒருகூட்டம் மக்களின் வரலாற்றைப் பின்னணியாகக் கொண்டுள்ளது. அழிவிலிருந்து தம்மை மீட்டு வாழவைத்த தெய்வத்தை ஆண்டுதோறும் வழிபட்டு தங்களின் நன்றியை வெளிப்படுத்துகின்றனர் மலையரையன் இனமக்கள்.

**மேற்கோள்நூல்கள்**

[1] Samuvel Mateer .Rev,Native Life In Travancore ,W.H.Allen & Co ,13,Waterloo Palace, London 1883.

[2] மலர், அரக்குளம் தர்சாஸ்தா சேத்திரத்திலே புனம்பிரதிஷ்ட்டா மகோல்சவம் ,2001.

**தகவலாளர்பட்டியல்**

[1] கோபாலகிருஷ்ண பணிக்கர் ,வயது 70 ,அரக்குளம்

[2] ராஜன் ,வயது 68 , மலையரையன், குருதிக்களம்

[3] சந்திரசேகரன் வாயது 50 ,மலையரைன் இனம், பூச்சப்பாறா

[4] ராஜி சந்திரசேகரன் வயது 48 ,மலையரையன் இனம் , பூச்சப்பாறா

[5] பங்கஜாட்சி (மணி) வயது 69 - மலையரையன் இனம்,குருதிக்களம்

[6] பானர்ஜி வயது 52 - மலையரையன் இனம், குருதிக்களம்

[7] கிருஷ்ணன் வயது 50 , மலையரையன் இனம், குருதிக்களம்

[8] சசிதரன் எம் .ஐ ,வயது 65 ,மலையரையன் இனம் ,பூச்சப்பாறா,